**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 1 COURT, NAMAKKAL.**

**STCNo. 1637/2022**

**PW - 1**

| | | |
|---|---|---|
| **PW. 1 Cross continuation** | ஜோதிலிங்கம் த/பெ.கிருஷ்ணன் | 05.08.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the Date: 28.07.2025

**(எதிரி ஆஜர்). இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களும் ஆஜர்)**

**விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 12.55 மணி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்) :–**

12) 11.07.2022 அன்று மாவட்ட ஆட்சி தலைவரிடம் மேற்படி எதிரி ரவிச்சந்திரன் கொடுக்கவேண்டிய கடன் தொகை குறித்து அளித்திருந்த புகார் மனுவில் எதரி ரவிச்சந்திரன் கொடுத்ததாக சொல்லும் காசோலை எண்ணை குறிப்பிட்டிருந்தேனா என்றால் இல்லை. மேற்படி புகார் மனு சம்மந்தமாக காவல் துறையில் என்னை எத்தனை முறை விசாரணைக்கு அழைத்தார்கள் என்றால் ஒரு முறை அழைத்தார்கள். காவல் துறையினர் என்னை முதல் முறை அழைத்து விசாரித்தபோதே நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று போலிசார் என்னிடம் கூறினார்களா என்றால் இல்லை, எதிர் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னதால் எங்களாலும் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் புகார் மனுவை தள்ளுபடி செய்து விட்டனர் என்று என்னால் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள சாட்சியம் பொய்யானதா என்றால் சரியல்ல.

13) மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள என்னுடைய தொலைபேசி எண்ணின் மூலம் தான் என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். புகார் மனு தொடர்பாக காவல் நிலையத்தில் விசாரணை செய்யும் போது எதிரி தரப்பில் என்ன பதில் சொல்லப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது, அப்போது ரவிச்சந்திரன் இல்லை. 11.07.2022 தேதியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கையால் எழுதப்பட்ட புகார் மனு கொடுத்த பிறகு 30.07.2022 தேதியில் ஒரு காசோலையும், 02.08.2022 தேதியில் ஒரு காசோலையும் S.K. ஜோதிலிங்கம் என்று பெயர் குறிப்பிட்டு என்னால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல, 02.07.2022 தேதியில் இரண்டு காசோலைகளையும் அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து தான் ரூ.6 லட்சத்திற்கும், ரூ. 4 லட்சத்திற்கும் கொடுத்தார்.

என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு காசோலைகளில் S.K. ஜோதிலிங்கம் என்று பெயரானது என்னால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல, அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து எதிரி தான் கொடுத்தார். புகார்மனுவில் எழுதப்பட்டுள்ள S.K என்ற எழுத்துகளின் வடிவமும், வழக்கு காசோலைகளில் உள்ள S.K என்ற எழுத்துக்களின் வடிவமும் ஒரே மாதிரியாக உள்ளது என்றும், வழக்கிற்காக வேண்டி எதிரி தான் பூர்த்திசெய்து கொடுத்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14) எதிரி எனக்கு கொடுக்கவேண்டியதாக சொல்லப்படும் பணத்திற்கு இரண்டு காசோலைகள் கொடுத்ததாக சொல்கிறேன், எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 02.07.2022 தேதியில் கொடுத்தார். எதிரி என்னிடம் எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால் 02.06.2022 தேதி. எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 02.06.2022 தேதியில் கொடுத்தேன். 02.06.2022 தேதியில் எதிரி எந்த இடத்தில் வைத்து என்னிடம் பணம் கேட்டார் என்றும், எங்கு வைத்து என்னால் பணம் கொடுக்கப்பட்டது என்றும், காசோலைகளை எங்கு வைத்து எதிரி கொடுத்ததார் என்றும் என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் 02.06.2022 தேதியில் எதிரி நிச்சயமாக நேரில் வந்து சந்தித்து பணத்தை பெற்றுக்கொண்டாரா என்றால் ஆமாம், என்னுடைய வீட்டிற்கு வந்து பெற்றுச்சென்றார். 02.06.2022 தேதியில் என்னால் பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில் எதிரி காசோலைகள் அல்லது கடனுறுதி சீட்டு ஆகியவற்றை கொடுக்கவில்லையா என்றால் இல்லை.

15) கைமாற்றுக்கடனாக கொடுத்ததாக இந்த வழக்கிலும், மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகாரில் கடனாக கொடுத்தாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், 02.07.2022 தேதியில் பணத்தை கொடுக்காததால் ரூ.5,40,000/- தொகை வட்டியாக கேட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன தேதி குறிப்பிட்டுள்ளேன் என்றால் 17.08.2022 தேதி குறிப்பிட்டுள்ளேன். 26.08.2022 தேதியிலும் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 02.07.2022 தேதியில் எதிரி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் காசோலைகள் எந்த வருடத்தில் அச்சிடப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அதை நான் பார்க்கவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட 399 எண் கொண்ட காசோலையானது 2017 ம் வருடத்திலும், STC.No.1675/2022 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட 474 எண் கொண்ட காசோலையானது 2018 ம் வருடத்திலும் அச்சடிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதைப்பற்றி

தெரியாது. இந்த வழககில் தாக்கல் செய்யப்பட்ட காசோலைகள் அச்சடிக்கப்பட்ட விவரங்களில் இருந்து என்னால் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கொடுத்த புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ள 01.05.2018 மற்றும் 01.10.2018 ஆகிய தேதிகளில் தான் எதிரியிடம் இருந்து மேற்படி காசோலைகள் என்னால் பெறப்பட்டுள்ளது என்றால் 2018 ல் கடன் கொடுத்ததற்கு அப்போது வேறு காசோலைகள் கொடுத்திருந்தார், 02.06.2022 தேதியில் 2018 ல் வாங்கிய கடன் தொகைகுண்டான பணத்தையும், வழக்கு காசோலைகள் இரண்டையும் கொண்டுவந்தார், அதை பெற்றுக்கொண்டு தான் வழக்கு காசோலை தொகையை கடனாக கொடுத்தேன்.

16) 02.06.2022 தேதியில் பழைய கடன் தொகைக்கு எவ்வளவு தொகை எதிரி கொடுத்தார் என்றால் ரூ.10 லட்சம் கொடுத்தார், திரும்பவும் உடனடியாக அப்பொழுதே ரூ.10 லட்சத்தை கைமாற்றுக்கடனாக திரும்ப கொடுத்தேன். மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனுவின் பேரில் நாமக்கல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரிடம் விசாரணையை முடித்து என்னால் எழுதிக்கொடுக்கப்பட்ட அறிக்கையில் ரூ.10 லட்சம் அசலையும், அதற்குண்டான ரூ.5,40,000/– வட்டியையும் மூன்று வருடமாக திரும்ப தரவில்லை என்றும், அதற்கு மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.08.2022 தேதியில் காவல் நிலையத்தில் மேற்சொன்னவாறு எழுதிக்கொடுத்துள்ள நிலையில், அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக 02.06.2022 அன்று எதிரியிடம் இருந்து திரும்ப பெற்ற ரூ.10 லட்சம் தொகையை அன்றையதினமே எதிரியிடம் மீண்டும் கடனாக கொடுத்ததாக சொல்வது அப்பட்டமான பொய் என்று சொன்னால் சரியல்ல. சிறுதானிய வியாபாரம் செய்வதாக சொல்லியுள்ளேன், அதை எங்குவைத்து நடத்தி வருகிறேன் என்றால் திருச்செங்கோடு ரோட்டில் க.எண்.78/A4 ல் வைத்துள்ளேன். மேற்படி கதவு எண்ணுடன் கூடிய முகவரிக்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

17) ரூ.10 லட்சம் கடனாக கொடுக்கும் அளவிற்கு எனக்கு எவ்வித வருமானமும், தகுதியும் கிடையாது என்றால் சரியல்ல. சிறுதானிய கடையின் மூலம் எனக்கு எவ்வளவு வருமானம் மாதம் வருகிறது என்றால் மாதம் ரூ.30 ஆயிரத்தில் இருந்து ரூ.50 ஆயிரம் சூழநிலையை பொறுத்து வரும். மேற்சொன்ன வ ருமானத்திற்கு வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. பொதுவாக ஒரு நபருக்கு ரூ.20 ஆயிரத்திற்கு மேல் கடனாகவோ கைமாற்றாகவோ தெகை கொடுக்கும் பொழுது ரிசர்வ் வங்கி விதிகளின் படி வங்கி பரிவர்த்தனை மூலம் தான்செய்யவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன விவரங்களை எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக வேண்டி தெரியாது என்று

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு தேவையான வீட்டு செலவுகள் மற்றும் என்னுடைய அன்றாட செலவுகளுக்கு சிறுதானிய வியாபாரம் மூலம் வரும் தொகையை தான் செலவு செய்கிறேன் என்றால் வீட்டு வாடகையும் வருகிறது. வீட்டு வாடகை மற்றும் சிறுதானிய வியாபாரம் மூலம் மாதம் ரூ.30 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை எனக்கு வருமானம் வருகிறது என்று என்னுடைய புகார், அறிவிப்பு மற்றும் பிரமணா வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

18) சிறுதானிய தொழில் சம்மந்தமாக உரிமம் எதுவும் பெற்று தொழில் செய்கிறேனா என்றால் இல்லை, சில்லரை வியாபாரம் தான் செய்கிறேன். மேற்சொன்ன ரூ.30 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை வரும் வருமானத்தை வங்கி கணக்கில் செலுத்துகிறேனா என்றால் செலவு போக மீதத்தை செலுத்துவேன். சிறுதானிய கடைக்கு என்ன பெயர் வைத்துள்ளேன் என்றால் பெயர் எதுவும் கிடையாது. எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் 2022 ம் வருடம் எனது வங்கியில் எவ்வளவு பணம் இருந்தது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வங்கியின் வரவு செலவு கணக்கு புத்தகத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும், தாக்கல் செய்கிறேன். எந்தெந்த வங்கயில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது என்றால் UCO வங்கி, நல்லிபாளையம் கிளையில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது. மேற்படி வங்கி கணக்கு எனக்கு எத்தனை வருடமாக உள்ளது என்றால் கடந்த 30 வருடமாக எனக்கு உள்ளது. 30.07.2022 தேதியில் ஒரு காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்து பணம் இல்லை என்று 01.08.2022 தேதியில் வங்கியால் திருப்பபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காசோலை வங்கியால் திருப்பபட்டது என்ற விவரத்தை எதிரியிடம் சொன்னேனா என்றால் நேரில் ஒரு முறை பார்த்து சொன்னேன். எந்த தேதியில்சொன்னேன் என்றால் சுமார் 3 முதல் 4 நாட்கள் கழித்து சொன்னேன். அதற்கு எதிரி என்ன சொன்னார் என்றால் நீதிமன்றத்தில் வழக்கு செய்ய இருப்பதாக நான் சொன்னேன், அதற்கு எதிரி இரண்டு மூன்று நாட்களில் கொடுத்துவிடுவதாகவும் வழக்கு எதுவும் வேண்டாம் என்றும் சொன்னார்.

19) வங்கியில் செலுத்திய இந்த வழக்கு சம்மந்தப்பட்ட 399 என்ற எண் கொண்ட வழக்கு காசோலை வங்கியில் பணம் இல்லை என்று 01.08.2022 அன்று திரும்பி விட்ட நிலையிலும், எதிரியிடம் இதுகுறித்து எந்த விவரமும் கேட்காதநிலையிலும் மறுநாள் 02.08.2022 அன்று இந்த வழக்கு தொடர்பான மற்றொரு வழக்கான STC.1675/2022 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 474 என்ற எண் கொண்ட காசோலையை வங்கியில் பணம் இல்லை என்கிற விவரத்தை நன்கு தெரிந்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு மனுவின்

2 வது பத்தி மற்றும் 3 வது பத்தியில் வழக்கு காசோலை தொகை ரூ.6 லட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன், 10 வது பத்தியில் காசோலை தொகை ரூ.7 லட்சம் என்று குறிப்பிட்டுள்ளதில் இருந்து வழக்கு புகார் மனுவை படிக்காமல் கையெழுத்திட்டுள்ளேன் எனறால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு மனுவில் சொல்லப்பட்டுள்ள தகவல் முன்னுக்கு பின் முரணாகவும், வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள தகவல்களும் முன்னுக்குபின் முரணாகவும் உள்ளது, மேற்படி முன்னுக்கு பின் முரணாக சொல்லப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கின் வழக்குமூலம் எழவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலைய விசாரணை அறிக்கை எழுதிக்கொடுத்த நாள் 01.08.2022 என்று குறிப்பிட்டும், இந்த வழக்கு தொடர்பான காசோலையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த காசோலையில் 30.07.2022 என்ற தேதியில் வங்கியில் செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளதும் பொய் என்று சொன்னால் சரியல்ல.

20) எதிரி என்னிடம் ரூ.6 லட்சம் கடன் வாங்கவில்லை என்றும், ரூ.6 லட்சத்தை எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு எவ்வித வருமானமும் கிடையாது என்றும், எதிரிக்கு எதிராக புகார் மனுவை தாக்கல் செய்ய எவ்வித வழக்கு மூலமும் எழவில்லை என்றும், எதிரிக்கு என்னிடம் தீர்க்கப்படவேண்டிய சட்டப்படியான கடன் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியும், நானும் தொழில் ரீதியாக நண்பர்கள் என்றால் சரிதான். எதிரி சிறுதானிய வியாபாரம் செய்கிறார் என்றால் சரிதான், தீவண வியாபாரமும் செய்கிறார். நானும், எதிரியும் நண்பர்கள் என்ற முறையில் தொழில் ரீதியாக என்னிடம் எதிரி கொடுத்த காசோலைகளை வைத்துககொண்டு அதை எதிரி திரும்ப கேட்டபொழுது தேடி எடுத்து தருவதாக சொல்லிவிட்டு, பின்னர் எதிரிக்கும், எனக்கும் ஏற்பட்ட மனு வருத்தம் மற்றும் தொழில் போட்டியின் காரணமாக எதிரி கையெழுத்தை மட்டும் இட்டு நிரப்பப்படாமல் கொடுத்த இரண்டு வழக்கு காசோலைகளை பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

(விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 02.07 மணி )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையொப்பம் செய்தார்.

ஒம்/–கா.செகனாஸ்பானு
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.